DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous S.T.C.No.188 /2023

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | அகத்தீஸ்வரன் (Pw.2) |
| Father/Husband Name | : | மணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day February of 2024

( எதிரி ஆஜர் இல்லை )

**முதல் விசாரணை :–**

1. நான் கட்டலாங்குளம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரியை தெரியும். கடந்த 16.04.2023 ம் தேதியன்று மாலை 5 மணியளவில் கள்ளங்குளம் குவாரியில் நான் சீட்டு போடும் இடத்தில் இருந்தபோது எதிரி வைரமுத்தோடு நான்கு நபர்கள் வந்து அதில் வைரமுத்து குவாரியில் சீட்டு போடும் உமாமகேஸ்வரனிடம் எங்கடா மாமூல் என்று கேட்டார். அதற்கு உமாமகேஸ்வரன் ஓனரிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொல்லவே அதற்கு வைரமுத்து சுன்னி ஒழுங்காக கொடுக்கவில்லை என்றால் உன்னையும் உனது ஓனர் தர்மராஜயும் வெட்டிவிடுவேன் என்று சொன்னார். அதன்பின்பு அவர் கிளம்பி சென்றார். பின்பு 23.04.2023 ம் தேதியன்று வியாழன்கிழமை மாலை 5 மணியளவில் வைரமுத்து குவாரிக்கு வந்து எங்கடா நான் கேட்ட மாமூல்

என்று உமாமகேஸ்வரனிடம் கேட்டார். அதற்கு மறுபடியும் ஓனரிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொன்னார். அதற்கு வைரமுத்து கொம்மாலக்க என்று அசிங்கமாக பேசி இன்னிக்கும் கொடுக்கவில்லை என்றால் உங்கள் இருவரையும் வெட்டிவிடுவேன் என்று சொன்னார். அப்போது நானும் அருகில் இருந்த நெடுஞ்குளம் கிராமத்தைச் சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரும் வைரமுத்துவை சத்தம் போட்டு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக உமாமகேஸ்வரன் காவல்நிலையத்தில் புகார் செய்தார். என்னை சம்பவ இடத்திலும், காவல்நிலையத்தில் போலீசார் விசாரித்தார்.

**எ.த.குவி–**

2. முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன். அசா1 உமாமகேஸ்வரன், அசா3 , அசா5 ஆகியோர் ஒன்றாக பணிபுரிந்தோம் என்றால் சரிதான். அனைவரும் நண்பர்கள் என்றால் சரிதான். 16.04.2023 ம் தேதியன்று குவாரிக்கு விஏஓ, தாசில்தார் யாரும் வரவில்லை. எங்கள் குவாரியில் அளவுக்கு அதிகமாக சட்ட விரோதமாக மணல் அள்ளுவதாக எதிரி புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். குவாரிக்கு தாசில்தார் வந்து குவாரியை ஓட்ட கூடாது என்று 16ம் தேதி சொல்லி உள்ள விபரம் தெரியுமா என்றால் அன்று தாசில்தார் வரவில்லை. குவாரிக்கு அருகில் எதிரியின் தோட்டம் உள்ளது என்றால் சரிதான். எதிரி தோட்டம் மேட்டுப்பகுதி. எங்களது குவாரி பள்ளப்பகுதியில் உள்ளது. குவாரிக்கு அருகில் பொது ஊரணி உள்ளது என்றால் இல்லை. குவாரிக்கு அருகில் எந்த ஊரணியும் இல்லை. குவாரியை சுற்றி மின்வேலி போட்டு வைத்துள்ளோம் என்றால் இல்லை. குவாரியில் மண் அள்ளுவதற்கு 25 அடி தோண்டியுள்ளோம். பிரச்சனை நடந்தவுடனே அசா1 காவல் நிலையம் சென்றுவிட்டார். பைக்கில் சென்றுவிட்டார். 16ம் தேதி ஏற்பட்ட சம்பவத்திற்கு புகார் கொடுக்கவில்லை. இரு தினங்களில் ஏற்பட்ட பிரச்சனை குறித்தும் எனது ஓனர் தர்மராஜிடம் சொல்லி உள்ளோம். பிரச்சனை நடந்த சமயத்தில் எத்தனை நபர்கள் இருந்தோம் என்றால் 4 நபர்கள் இருந்தோம். மேற்படி இரு தினங்களிலும் 4 நபர்கள் மட்டுமே

இருந்தோம். என் உடன் பிறந்தவர்கள் 6 பேர். அதில் அசா5 சத்தியேந்திரன் எனது தம்பி. வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார். மற்றும் இரு சகோதரர்கள் வழக்கறிஞராக உள்ளார்கள். அசா5 சத்தியேந்திரன் குவாரியில் மேனேஜராக பணிபுரிகிறார். அவரை பற்றிய விபரங்களை போலிசாரிடம் சொன்னோம். குவாரியில் இருந்து முக்குளம் காவல் நிலையம் 6 கிமீ தொலைவு இருக்கும். பிரச்சனையின்போது காவல் நிலையத்திற்கு உமாமகேஸ்வரன் மட்டும் உடன் சென்றார். ஓனர் பெயர் தர்மராஜ். அவர் மதுரையில் குடியிருந்து வருகிறார். வார வாரம் சனிகிழமை மன்ற அலுவலகத்திற்கு வருவார். குவாரிக்கு வரமாட்டார். பொதுஇடத்தில் கெட்ட வார்த்தை பேசியதால் மனஉளைச்சல் ஏற்பட்டதாக சொல்லவில்லை. எனது சகோதரர் சத்தியேந்திரன் சத்தம் போட்டு விலக்கிவிட்டார். மேற்படி விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேன். குவாரிக்கு முன்பு விவசாயம் செய்தேன். நாங்கள் 4 நபர்களும் நண்பர்கள் என்பதால் அக்கறையுள்ள சாட்சி என்றால் சரியல்ல. சம்பவதன்று நான் குவாரியில் இல்லை என்றாலும் ஊரில் விவசாயம் செய்து கொண்டிருந்தேன் என்றாலும் சரியல்ல. எதிரி அசா5 எனது சகோதரர் வேலை செய்யும் குவாரி மீது புகார் கொடுத்ததால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.